ALPHA MIND POWER

# NEWSLETTER



**AUGUST 2019**

## *From Guruji's desk....*

My Dear Alpha Siddha,

Writing this letter with a lot of love and blessings. Our Rishikesh yatra is fast approaching. I am always very happy to go to Rishikesh. Many of our Alpha Siddhas also are thrilled to join this yatra every year. The reason is the highly positive energy that we experience there. Meditators like us are always excited to be in a very positive energy field. This is the ecstasy that we keep looking for. And Rishikesh, the Dev Bhoomi, is the right place where it is available in abundance.

We stay there at Swami Dayanand Saraswathi Ashram which is a very comfortable place with south indian food. The highlight is that Ganges flows just behind the ashram and we feel blessed to have a ganges dip every morning.

Shantagni is the 5 days residential workshop that we have there. In this workshop we have meditations, Music Therapy, Poojas, chanting etc. The whole program is aimed to reprogram the mind.

In our day to day life, we keep picking up a lot of negativity. This negativity which we carry gives rise to a lot of negative thoughts and emotions which create havoc in our lives. With meditation we do find a lot of peace and solace. But often it is short lived as the negativity keeps pouring in again and again.

Before I started Shantagni in 2015, many Alpha Siddhas used to tell me that they felt very happy and peaceful after attending any of our classes. But once they reached home in the evening, somehow that peace got either reduced or disturbed.

And that is why I started Shantagni, a 5 days residential workshop. The serene atmosphere, the routine that we follow and the ashram life there, creates the right background to reprogram our mind. All the negativity vanishes and at the end of the program there is only peace and tranquility in the mind. And this peace remains with us.



This peace is what every human being craves. It is easily available to us with the Shantagni program. Unless we have some way to cleanse our mind periodically and charge it with positive energy, our day to day life will not allow us to have positive thoughts or peace of mind.

This time we are also planning to go to Badrinath. We have been going to Mahavatar Babaji's cave during our last few Rishikesh yatras. It is believed that after his stay in the cave at Dronagiri, Babaji finally retired into the mountains with his sister at Badrinath. That is why I felt it will be apt to visit Badrinath.

At Badrinath we will have darshan of the deity and also visit Mana Village, the last village of India with the last Tea Shop of India. We will visit Vyasar cave where it is believed that Mahabharatha was written and where, due to his anger, the Saraswathy river disappeared. We can actually see that phenomenon there.

If you can join us it will be great. Even if you cannot join us, please be with us mentally and receive the energy from these divine places.

Vinayaka Chathurthi is just a month away. This year, let us decide not to pollute the sea waters by throwing painted Ganesh statues into it. It is really not fair to do that. Let us use proper Ganeshas made of mud which can be drowned in our own wells. Or let us use the seed Ganeshas which can be dissolved to grow into a tree. Personally, I love Ganesh so much that I cannot bear to see him dissolve. Hence, I have got a small Ganesh statue in metal which I have decided to keep permanently in my house and do pooja. So, there are many alternatives. Think and avoid painted Ganeshas from this year.

Blessings to always be in positive energy,

**Srimatha**

### *Rishikesh Camp With Guruji*

***14.08.2019 to 24.08.2019***

**BADRINATH :** 15.08.2019 to 17.08.2019 (3 days)

**SHANTAGNI** : 19.08.2019 to 23.08.2019 (5days)
Reprogram your mind -
Residential Retreat at Ashram

**You can attend either one or both the programs.**

For further enquiries please contact AMP office:
+919841272146



***Guruji with Alpha Siddhas at Sanjeevani Class at Coimbatore on 21.07.2019***

என் அருமை ஆல்ஃபா சித்தரே,

இந்தக் கடிதத்தை அதிக அன்பும் ஆசிகளும் கொண்டு எழுதுகிறேன்.

நமது ரிஷிகேஷ் யாத்திரை வேகமாக நெருங்கி வருகிறது. ரிஷிகேஷ் செல்வது என்றாலே எனக்கு எப்போதும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். ஒவ்வொரு வருடமும் நமது ஆல்ஃபா சித்தர்கள் இந்த யாத்திரையில் கலந்துகொள்ள மிகவும் ஆவலாக வருவார்கள். காரணம், அங்கு நாம் அனுபவிக்கும் அதிகமான சக்தி தான். நம்மைப் போன்ற தியானம் செய்பவர்கள் எப்போதும் நல்ல சக்தியில் இருப்பதை தான் மிகவும் எதிர்ப்பார்க்கிறோம். இந்த ஆனந்ததை தான் நாம் தேடுகிறோம். ரிஷிகேஷ் ஒரு தேவ பூமி. நல்ல சக்தியை அபரிமிதமாக உணர சரியான இடம்.

தென்னிந்திய உணவுடன் கூடிய வசதியான இடமாக விளங்கும் சுவாமி தயானந்த சரஸ்வதி ஆசிரமத்தில் தான் தங்குவோம். ஆசிரமத்தின் பின்புறம் கங்கை ஓடுகிறது என்பதும், ஒவ்வொரு நாள் காலையிலும் கங்கை நதியில் நீராடுவது நமது பாக்கியமாகும் என்பதும் இந்த ஆசிரமத்தின் சிறப்பாகும்.

சாந்தக்னி அங்கு நடைபெறும் 5 நாள் பயிற்சி வகுப்பாகும். இந்த வகுப்பில் தியானங்கள், ஆல்ஃபா மியுசிக் தெரபி, பூஜைகள், மந்திரங்கள் முதலியன தினமும் இருக்கும். இதன் நோக்கம் மனதை தூய்மைப்படுத்துவதாகும்.

நமது தினசரி வாழ்க்கையில், நாம் அதிகமான தீய விஷயங்களை கண்டு வருகிறோம். நாம் சுமக்கும் இந்த எதிர்மறையான எண்ணங்கள், உணர்ச்சிகள் இவை நமது மனதில் பெரும் பாதிப்பை உண்டாக்கும். தியானம் மூலம் நாம் மிகுந்த நிம்மதியையும் அமைதியையும் காண முடியும். என்றாலும், எதிர்மறையான எண்ணங்கள் மீண்டும் மீண்டும் வந்து கொண்டே தான் இருக்கின்றன.

நான் 2015-ல் சாந்தக்னியை தொடங்குவதற்கு முன்பு, பல ஆல்ஃபா சித்தர்கள், நமது வகுப்புகளில் கலந்து கொண்ட அன்று அவர்கள் மிகவும் சந்தோஷமாகவும் அமைதியாகவும் இருப்பதாக சொல்வார்கள். ஆனால் மாலையில் வீடு போய்ச் சேர்ந்ததும், எப்படியோ அந்த நிம்மதி குறைந்து விடுகிறது என்றும் வருந்துவார்கள்.

அதனால்தான் ஒரு 5 நாள் பயிற்சியாக சாந்தக்னி வகுப்பை தொடங்கினேன். அமைதியான சூழ்நிலை, அன்றாட பயிற்சி, மற்றும் ஆசிரம வாழ்க்கை ஆகியவை, நம் மனதை தூய்மைப்படுத்த சரியான பின்னணியை உருவாக்குகிறது. எதிர்மறை எண்ணங்கள் முற்றிலுமாக மறைந்து விடுகின்றன. மனதில் அமைதி மட்டுமே தங்குகிறது. அது தொடரவும் செய்கிறது.

இந்த அமைதியை தேடித்தான் ஒவ்வொரு மனிதனும் ஏங்குகிறான். இது சாந்தினி வகுப்பில் நமக்கு எளிதாகக் கிடைக்கிறது. நம் மனதை திரும்பத் திரும்ப தூய்மைப்படுத்தி, நேர்மறையான சக்தியை கொண்டு நிரப்ப நமக்கு ஏதாவது வழி இல்லாவிட்டால், நமது அன்றாட வாழ்க்கை நேர்மறை எண்ணங்கள் அல்லது மன அமைதியை உணர விடாது.

இம்முறை பத்ரிநாத்திற்கும் செல்ல திட்டமிட்டிருக்கிறோம். நாம் கடந்த சில ரிஷிகேஷ் யாத்திரைகளின் போது மகாவதார் பாபாஜி குகைக்கு சென்று கொண்டிருந்தோம். அவர், துரோணகிரியில் உள்ள குகையில் தங்கியிருந்த பிறகு, இறுதியாக பத்ரிநாத்தில் தனது சகோதரியுடன் மலைகளுக்குள் சென்று விட்டார் என்று நம்பப்படுகிறது. அதனால்தான் நாம் பத்ரிநாத் செல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைத்தேன்.

பத்ரிநாத்தில் நாம் கோவிலுக்கு செல்வோம். இந்தியாவின் கடைசி தேநீர் கடையுடன் இந்தியாவின் கடைசி கிராமமான மானா கிராமத்தையும் காண்போம். மகாபாரதம் எழுதப்பட்ட வியாசர் குகைக்கு செல்வோம். அங்கு தான் அவரது கோபத்தின் காரணமாக சரஸ்வதி நதி மறைந்து விட்டது. அந்த நிகழ்வை அங்கு நம்மால் உண்மையில் உணர முடியும்.

நீங்கள் யாத்திரையில் எங்களுடன் சேர்ந்துகொள்ள முடிந்தால் மிக நன்றாக இருக்கும். அப்படி முடியா விட்டாலும், மனதால் எங்களுடன் இணைந்திருங்கள். அங்குள்ள தெய்வீக சக்தியை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநாயகர் சதுர்த்திக்கு ஒரு மாதம் தான் இருக்கிறது. இந்த ஆண்டு, கடல் நீரை வர்ணம் பூசிய விநாயகர் சிலைகளை கரைத்து மாசுபடுத்தக்கூடாது என்று நாம் முடிவு செய்வோம். அது உண்மையாகவே நியாயமற்ற ஒரு செயல் தான். நமது சொந்தக் கிணறுகளில் போடக் கூடிய மண்ணில் செய்யப்பட்ட விநாயகரை நாம் பயன்படுத்துவோம். அல்லது விதையுடன் கூடிய கரைக்கும்பொழுது ஒரு மரமாக வளரக்கூடிய விநாயகரை பயன்படுத்துவோம். தனிப்பட்ட முறையில், எனக்கு பிள்ளையாரை மிகவும் பிடிக்கும். அவரைப் கரைத்து பார்ப்பதற்கு என் மனம் இடம் கொடுக்காது. எனவே, நான் ஒரு சிறிய பிள்ளையார் சிலையை நிரந்தரமாக என் வீட்டில் வைத்து பூஜை செய்ய முடிவு செய்திருக்கிறேன். பல மாற்று வழிகள் உள்ளன. சிந்தித்து இந்த வருடத்திலிருந்து வர்ணம் பூசிய விநாயகரை தவிர்க்கவும்.

எப்போதும் நல்ல சக்தியுடன் இருங்கள்.

ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**

**குருஜியுடன் ரிஷிகேஷ்** முகாம்

**14.08.2019 முதல் 24.08.2019**

**பத்ரிநாத்**: 15.08.2019 - 17.08.2019 ( 3 நாட்கள்)

**சாந்தக்னி**:19.08.2019 - 23.08.2019 ( 5 நாட்கள்)

மனதை தூய்மைபடுத்த -
ஆசிரமத்தில் நடக்கும் வகுப்பு

**நீங்கள் ஒன்று அல்லது இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம்**

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : +919841272146

**A truly touching feedback from Karthik, Coimbatore and Guruji's direct reply:**



My Namasthe to all Alpha Siddhas and Srimatha. My name is Karthik. I am a heavy vehicle driver. My age is 32. I have studied upto 10th standard. In 2001 after I finished 10th standard I wanted to eat Parotta and hence came to the field of lorry driving. In 2006 I became a lorry driver. When I say lorry driver, I do not have to tell you, all of you know about it.

It is difficult to get sleep, food, drinking water, money, happiness anything at the right time. Everything was wrong. Sometimes, when you feel very sleepy and are driving, the vehicle will take a small spin. That is I lose control. At that time there will be no place where I can stop and sleep for awhile. You ask why cant I pull over to the side of the road and sleep.

So, to keep myself awake at that time I used to sing loudly, or try to talk to somebody on the phone. I talk on the phone for sometime or smoke. But nothing helps after a point of time. At such times, even when I pick up my phone to see the time, I cant even see the time as my eyes will be blurred. That is when I would feel why did I come to this job. Active in the night and sleeping in the day. This is our world. What to do. Even if we lose control for a second we can lose our life.

Because I joined this line immediately after school, I could not attend any function in any relative's house. Sometimes, if I get a chance to attend also, all the others will go back to their normal lives immediately after the wedding. But the lorry which I was driving would be travelling to Delhi, Gujarat, Kolkatta etc and may take atleast 15 to 20 days to be back. I can go to work only then. Hence, I could never attend weddings of friends or relatives.

Those who are in the same town may take leave for a day or half a day to attend a wedding. But can a lorry driver take 15 days leave to attend a wedding. 15 days' expenses plus I lose 15 days' salary too? Even if I explain this nobody would understand. They get angry with me. Sometimes I could not go home for Diwali or Pongal also. Those times I used to feel like crying.

At times I used to think I should drive a car within my town itself. But I may not get much salary in a small place. I cant do anything with that. In such a situation, one day as I was having lunch at home, I happened to see Guruji's program on TV. I felt like attending the class. But I had neither the money nor the time. My journey continued with the lorry. But my mind refused to settle down and work there. I used to take leave and come home. When I was at home like this, a medical shop owner (also a local driver broker) sent me as an acting driver to an engineer. Whenever I was on leave, I used to do this acting driver job for that engineer. At that time there was a vacancy with that engineer with a good salary and Sunday holiday. Although I tried, I did not get it. The medical shop owner created a lot of politics and did not let me join there.

I could join there only if the medical shop person recommends. I continued to work on the lorry. Once when I was at home I calculated the days I would be home and booked for Alpha meditation class. But the loading got delayed by one day. I did not know how to attend the class. From where I was it was around 1500 km to my town. Still I thought let me try and I drove for one and a half days without any sleep and reached home.

It was one day, one night and again one day driving and I reached home late night. I slept for hardly one hour and then got up and came to our Alpha class at Coimbatore. That is in 48 days hours I had not slept for even one hour fully. Now on the third day without proper sleep I was sitting in our Alpha meditation class. When Guruji was registering the Alpha mudra in meditation I almost fell off from the chair. That day it happened many times that I was about to fall off from the chair and I controlled myself. I was not able to concentrate fully in the meditation. When the class got over and I came home, I was feeling bad that I could not concentrate properly in the class.

But still, after coming home I kept reading the book given in the class again and again. I kept listening to the audio given in the class again and again. This time when I went with the lorry I took the book and CD with me.

It is not easy to meditate in a lorry. Mosquitoes, mosquito repellent, no sleep, lot of noises disturbing. The heat in the vehicle used to make me sweat too much. It was too much heat during the day and mosquitoes in the night. Even in such circumstances I made sure I meditated atleast twice or thrice in a week. If I could not meditate I will chant Navakshari mantra. While meditating many times I spoke to the subconscious minds of the medical shop owner and the engineer.

Six months went by like this. After that, due to some family circumstances, I switched off my phone for about 15 days. During these 15 days as I expected, that engineer had tried calling me for a regular job. But my phone was switched off. The medical shop person was also trying to prevent me from joining there. However, he did not get a suitable person. I returned home.

This is where the miracle happened. The same medical shop owner called me and said where were you, we could not contact you at all. Go and see the engineer. He was looking for you. I went and met him. He asked me to join there for a regular job. I was overjoyed. This was possible only with Alpha. Thanks to Guruji.

I was without sleep, without concentration, still when I did the meditation for six months, if such a miracle could happen, then those who are at home should cut down time wasting activities, stop watching serials, watch your breath when you are free. Do our meditation with belief. Definitely good things will happen.

When we enter a temple we feel very peaceful because of the positive vibrations there. When we meditate in a temple we receive more energy. Do you know why? Because daily good mantras are chanted and positive vibrations are created. But in our houses serials are bringing in tears, anger, hatred, inferiority complex, jealousy, inability, fear etc. It creates a situation where we are constantly fighting against enemies in personal life and in business. It is only such thoughts that are being sown in our houses and in our subconscious mind.

Whatsapp, facebook, youtube are champions at eating away our time. Pl think properly and reply. What have we achieved by watching serials for so many years? Anything at all? We have only lost a lot in life. At the most you may say I feel bored to be alone and so I am watching serials. If you cannot be alone with yourself, who can be with you? Pl reflect on this.

I have a request for all of you. If we build a house without basement will it stand? It cannot stand, right? The breathing exercise recommended by Guruji is also like that. Allot a few minutes for breathing exercise before meditation. Then see how good the meditation is. Whatever you want will happen. One more thing is that our intuition will start working very well. Even when we go to a place our intuition will tell us correctly whether this person will come or not. It is correct more than 99%. This is very useful for day to day life. Moreover, if there is a neem tree near your house, in the morning, stand near the tree, hold Alpha mudra and give some commands. That energy works so beautifully. This happened one day by chance. Then I tried it out many times. Small things happen very easily. Bigger things take some time. This energy is wonderful. Please try and see. Don't do it without enthusiasm. Anything that you do you should do continuously and with whole heart. Victory is yours.

After seeing this success myself and my friend Nallusamy (also an Alpha Siddha) have joined together and are thinking of doing export business. For this venture of ours to be successful I request all my dear ones here to give us gold color for prosperity and bless us.

**Guruji's reply to this msg:**

Karthik… I happened to see your post by chance now. My eyes filled with tears. I have taught Alpha meditation to more than a lakh of people. Many people's experiences have surprised me and make me very happy. But this is the first time I have tears in my eyes. Every Alpha Siddha should read your post and benefit. We will circulate this in all our groups. You are an example for everyone.

Continue to meditate with the same determination. For those who give many reasons for not meditating, your message is the best medicine. You will see a much better life.

I wish to meet you. We have classes on 20th and 21st this month at Coimbatore. Please do come. You can attend any class without payment.
My heartful blessings for your life and your business to see a lot of success.

Srimatha

## கோவை கார்த்திக்கின் மனதை தொடும் ஆல்ஃபா அனுபவம் மற்றும் குருஜியின் நேரடி பதில்

ஆல்பா சித்தர்கள் எல்லாருக்கும் ஸ்ரீமாதா அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்கள்.

என் பெயர் கார்த்திக்.நான் ஒரு கனரக வாகன ஓட்டுநர்.எனக்கு வயசு 32. நான் பத்தாம் வகுப்பு வரைக்கும் படிச்சிருக்கேன்.2001ல பத்தாம் வகுப்பு முடிச்சிட்டு புரோட்டா சாப்பிட ஆசைப்பட்டு உடனே லாரி தொழிலுக்கு வந்துட்டேன். 2006இல் நான் டிரைவர் ஆகிவிட்டேன்.லாரி தொழில்நாலே நான் சொல்ல வேண்டியது இல்லை. உங்க எல்லாருக்கும் தெரியும்.தூக்கம், சாப்பாடு, குளிக்கிறது, பணம், சந்தோசம், குடிக்கதண்ணி இது எல்லாமே சரியான நேரத்துக்கு கிடைக்காது. எல்லாமே மாறுபட்ட பழக்கவழக்கமா இருந்துச்சு. அதுலயும் வண்டி ஓட்டும்போது பார்த்தீங்கன்னா தூக்கத்துல சில சமயம் வண்டி ஒரு கிறுக்கு கிறுக்கும். அதாவது எனது கட்டுப்பாட்டை இழக்கும். அப்ப கொஞ்ச நேரம் பாதுகாப்பா நிறுத்தி தூங்குவதற்கு இடம் கிடைக்காது.

ஏன் ரோட்டோரத்தில் கொஞ்ச நேரம் நிப்பாட்டி தூங்கலாமே? அப்படின்னு உங்களுக்கு ஒரு கேள்வி வரும்.

இந்தியா முழுக்க இருக்க தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை இங்க எங்கயுமே பாதுகாப்பான இடம் இல்லாம நிறுத்தி தூங்கினா வாகனத்திலிருந்து டீசல் அல்லது பெட்டியில் இருக்கிற பணம் அல்லது வாகனத்தில் ஏற்றிவந்த சரக்கு, அல்லது வாகனமே ஏதாவது திருட்டு போய் விடும்.சில சந்தர்ப்பங்களில் சில ஓட்டுனர்கள் உயிரை கூட விட்டுருக்காங்க.

அதனால அந்த நேரத்துக்கு தூக்கத்தை கண்ட்ரோல் பண்ண சத்தமா பாடுவேன், கத்துவேன், யாருக்காவது போன் பேசலாமா என்று முயற்சிப்பேன், போன் எடுத்தா கொஞ்சநேரம் பேசுவேன், அதுவும் முடியலன்னா.... பிடிப்பேன், ஆனால் எதுவுமே ஒரு கட்டத்துக்கு மேல வேலைக்காகாது. அந்த நேரத்தில் செல்போன் எடுத்து டைம் பார்க்கலாமேன்னு பாத்தா டைம் பாக்க முடியாது. கண்ணு ரொம்ப கலங்கலா தெரியும். அந்த நேரத்தில் ஏன்டா இந்த வேலைக்கு வந்தோம்னு தோணும். இரவினில் ஆட்டம், பகலினில் தூக்கம், இதுதான் எங்கள் உலகம்.. என்னங்க பண்றது, ஒரு செகன்ட் அசந்தாலும் உயிர் போயிடுமே. அதுலயும் பள்ளிப்படிப்பை விட்ட உடனே வேலைக்கு போனதால ஊர்லயும் சொந்தங்கள் வீட்லயும் எந்த ஒரு பங்ஷனுக்கும் சரியா போக முடியாது. ஒரு வாய்ப்பு கிடைத்து போனாலும், கல்யாண வீட்டுக்காரர்கள் கல்யாணத்தை முடிச்சு அவங்கவங்க வேலைய பாக்க போயிடுவாங்க. ஆனால், நான் ஓட்டுன வண்டி டில்லி,குஜராத், கல்கத்தான்னு போய்ட்டு வரதுக்கு பதினைந்து இருபது நாள் ஆகும். அதுக்கப்புறம் தான் வேலைக்கு போக முடியும். அதனால ஒரு சொந்தக்காரங்க கல்யாணத்துக்கு, நண்பர்களோட கல்யாணத்துக்கு கூட போக முடியாத சூழ்நிலை இருக்கும். உள்ளூர்ல இருக்குறவங்க ஒரு கல்யாணத்துக்கு ஒருநாளோ, அரைநாளோ லீவுபோடுவாங்க. ஆனா ஒரு கல்யாணத்துக்காக ஒரு லாரிடிரைவர் பதினைந்துநாள் லீவுபோடமுடியுங்களா? பதினைந்துநாள் செலவு + பதினைந்துநாள் சம்பளமும் போயிடும். சொன்னாலும் புரியாது. போகலைன்னா கோவிச்சுக்குவாங்க. ஒரு தீபாவளி பொங்கலுக்கு கூட வர முடியாம இருக்கும். அந்த நேரம் ரொம்ப அழுகையாக வரும்.அதுக்கப்புறம் என் மனசுல அடிக்கடி தோன்றும் ஒரு விஷயம், உள்ளூரிலேயே கார் ஓட்டலாம் என்று நினைத்தால் நிச்சயமாக கிராமத்தில் சம்பளம் பத்தாது. அத வச்சு ஒண்ணுமே பண்ண முடியாது. இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில ஒருநாள் மதியம் வீட்டில் சாப்பிடும் போது பொதிகை டிவில நம்ம குருஜீயோட புரோக்ராம் பார்க்கற வாய்ப்பு கிடைச்சது. இந்த தியானத்தில கலந்துக்கணும்னு எண்ணம். நேரமும் பொருளாதாரமும் ஒத்துவரல. மறுபடியும் என்னோட பயணம் லாரிலதான் போய்க்கிட்டு இருந்துச்சு. ஆனா, என்னோட மனசு லாரியில் மனசுஒன்றி வேலை பாக்க முடியல. அடிக்கடி லீவு போட்டுட்டு வீட்டுக்கு வந்துடுவேன். வீட்டுல இருக்கறப்ப லோக்கல் இருக்கிற ஒரு மெடிக்கல் (இவர் ஒரு டிரைவர் புரோக்கர்) கடைக்காரரோட நண்பர் உள்ளூர்ல இன்ஜினியர்கிட்ட வேலைபாக்குற டிரைவர் லீவுபோட்டதால என்னை ஆக்டிங் டிரைவரா அனுப்பினார். நான் அடிக்கடி லீவுல இருக்கிறப்ப அந்த இன்ஜினியருக்கு ஆக்டிங் டியூட்டி பாத்துக்கிட்டு இருந்தேன். அந்த சமயத்தில் நல்ல சம்பளத்தில் உள்ளூரிலேயே சண்டே லீவோட அந்த இன்ஜினியர் கிட்ட டிரைவர் வேக்கண்ட் இருந்தது. நான் முயற்சி பண்ணியும் அந்த வாய்ப்பு கிடைக்கல. என்னை அந்த மெடிக்கல் கடைக்காரர் ரொம்ப பாலிடிக்ஸ் பண்ணி என்னை அங்க சேரவே விடல.அந்த மெடிக்கல் கடைக்காரர் ரெக்கமண்டேஷன் இருந்தால்தான் நான் அங்க வேலைக்கு சேர முடியும். நானும் எப்பவும் போல லாரியில் வேலை பார்த்துகிட்டு இருந்தேன். வீட்டில் இருக்கும்போது நான் ஊருக்கு வரக்கூடிய நாள் கணக்கு பண்ணி ஆல்பாதியானவகுப்புக்கு புக் பண்ணிட்டேன். ஆனா நான் நினைத்தபடி லோடிங் ஆகல. ஒருநாள் தாமதம் ஆயிடுச்சு.எப்படி தியானத்துல கலந்துக்கறதுன்னு புரியல. இருந்தாலும் நான் இருக்கிற இடத்திலிருந்து எங்க ஊருக்கு 1300கிலோ மீட்டர் வரும் முயற்சி பண்ணலாமே என்று ஒன்றரை நாள் தூங்காமல் தூக்கத்தோட ரொம்ப மல்லுகட்டி ஓட்டிக்கிட்டு ஊருக்கு வந்து சேர்ந்தேன்.ஒரு பகல், ஒரு இரவு, ஒரு பகல், இரண்டாவது நாள் லேட்நைட்டு வீட்டுக்கு வந்துட்டேன்.

வந்தவுடனே ஒரு மணி நேரம் கூட முழுசா தூங்காம எந்திரிச்சு கோயம்புத்தூர்ல நடக்கிற நம்ம ஆல்பா தியானத்துக்கு வந்துட்டேன்.

அதாவது 48மணி நேரத்தில் இரண்டு நாளில் ஒரு மணி நேரம் கூட முழுசா தூங்கல. இப்ப மூன்றாவது நாள் காலையில தூக்கம் இல்லாம நம்ம தியான வகுப்புல உட்கார்ந்தேன். குருஜீ தியானத்தில் ஆல்பா முத்திரையை மனசுல பதிய வைக்கும்போது தூக்கத்துல சேரில் இருந்து கீழே விழுந்து இருப்பேன். அன்னைக்கு தியான வகுப்பு பூராவும் பலமுறை கீழே விழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு முடிஞ்சவரைக்கும் கன்ட்ரோல் பண்ணிக்கிட்டேன். தியானத்தில் என்னால முழுசா concentration பண்ண முடியல.

வகுப்பு முடிந்து வீட்டுக்கு வரும்போது தியானவகுப்ப நல்லா கவனிக்க முடியலையேங்கற வருத்தம்.

இருந்தாலும் வீட்டுக்கு வந்ததுக்கப்புறம் வகுப்புல கொடுத்த புத்தகத்தை மறுபடியும் மறுபடியும் படித்துக் கொண்டே இருந்தேன்.

அந்த வகுப்பில் கொடுத்த ஆடியோவையும் அடிக்கடி கேட்டுக் கொண்டே இருந்தேன்.

இந்தமுறை லாரிக்கு போகும்போது அந்த ஆடியோவையும், புத்தகத்தையும் கையோடு கொண்டுபோயிட்டேன்.லாரியில தியானம் பண்றது சாதாரண விஷயம் இல்லைங்க.

கொசுக்கடி, கொசுவர்த்தி புகை, தூக்கமின்மை, ஏதாவது சத்தம் கேட்டுக்கொண்டே இருப்பது, வண்டியில் இருக்கிற அனலில் வேர்த்து விறுவிறுத்துப் போறது. அதாவது பகலில் அனல் இரவில் கொசு

இந்த மாதிரி சூழ்நிலையிலேயும் வாரத்துல எப்படியாவது இரண்டு அல்லது மூன்று முறை தியானம் பண்ணி விடுவேன். தியானம் பண்ண முடியலைன்னா நவாக்ஷரி மந்திரம் சொல்வேன்.

தியானம் பண்ணும் போது அந்த மெடிக்கல் கடைக்காரர்கிட்டயும் அந்த இன்ஜினியர் கிட்டயும்

பலமுறை தியானத்தில் ஆல்மனசோட பேசி இருக்கேன்.

இப்படியே ஒரு ஆறு மாசம் போச்சு. ஆறு மாசத்துக்கு அப்புறம் என்னோட குடும்ப சூழ்நிலையின் காரணமாக ஒரு 15நாள் என்னோட செல்போனை சுவிட்ச் ஆப் பண்ணிட்டேன். நான் செல்போனை சுவிச்ஆப் பண்ண நேரத்துல நான் எதிர்பார்த்த மாதிரியே என்னைய ரெகுலர் வேலைக்கு வர சொல்லி எனக்கு போன் பண்ணி இருக்காரு, அந்த இஞ்சினியர். ஆனா என்னோட நம்பர் சுவிட்ச் ஆப். அந்த மெடிக்கல் கடைக்காரரும் என்னை இஞ்சினியரிடம் சேர விடக்கூடாதுன்னு பல முயற்சிகள் செஞ்சிருக்காரு. ஆனா அவருக்கு தகுந்த ஆள் செட் ஆகல. அந்த நேரம் நான் ஊருக்கு வந்துட்டேன்.

இங்கதாங்க ஒரு ஆச்சரியம். அதுக்கப்புறம் அந்த மெடிக்கல் கடைக்காரர் என்னை கூப்பிட்டு என்னப்பா கார்த்தி அந்த இன்ஜினியர் உனக்காக பத்துநாளா போன் பண்ணிட்டு இருக்காரு உன்னைய பிடிக்கவே முடியல. போய்பாரு கார்த்தின்னு சொன்னாரு.

நானும் போய் பார்த்தேன். அவர் என்னைய ரெகுலரா வேலைக்கு வர சொல்லிட்டாரு. எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷங்க. இது ஆல்பானாலதாங்க சாத்தியம். குருஜிக்கு ரொம்ப நன்றிங்க.

தூக்கத்துல சரியா கவனிக்க முடியாம, தியானத்த சரியா பண்ண முடியாம, ஒரு ஆறு மாசம் மனசுஒன்றி விடாமுயற்சி பண்ணாலே இது நடக்குதுன்னா, வீட்ல இருக்குறவங்க கொஞ்சம் வெட்டி வேலைய குறைச்சி, சீரியல் பாக்குறத நிறுத்திட்டு, சும்மா இருக்கும் போது மூச்சை கவனிங்க. நம்பிக்கையோட நம்ம தியானம் பண்ணுங்க. கண்டிப்பா நல்லதே நடக்கும். நம்ம கோயிலுக்குள்ள போனா ஒரு நல்ல அதிர்வலைகளால நாம நிம்மதியா உணர்றோம். கோயில்ல தியானம் பண்ணா அதிகமான சக்தி கிடைக்கிறது. என்ன காரணம் தெரியுமா? அங்க தினமும் நல்ல மந்திரங்களை ஓதி ஓதி நல்ல அதிர்வலைகள் இருக்கு. ஆனா வீட்ல டிவியில சீரியல் சத்தம் ஓதி ஓதி, பார்த்துப் பார்த்து வீட்லயும் மனசுலயும் அழுகை, கோபம், ஆத்திரம், தாழ்வு மனப்பான்மை, பொறாமை, இயலாமை, பயம், எப்பவும் வாழ்க்கையிலயும் தொழில்லயும் எதிரிகள் கிட்ட போராடிக் கொண்டே இருக்கிற மாதிரி ஒரு சூழ்நிலை. இந்தமாதிரி எண்ணங்கள்தான் நம்ம வீடுகள்லேயும், நம்ம ஆல்மனசுலயும் பதிஞ்சிருக்கு.

அதுலயும் whatsapp, facebook, youtube இதெல்லாம் நம்ம நேரத்த திங்கறதுல கில்லாடிங்க.

நல்லா யோசிச்சு பதில் சொல்லுங்க. இத்தனை வருஷம் நாம சீரியல் பார்த்ததினால் என்ன சாதித்தோம்? ஏதாவது உண்டா? வாழ்க்கையை இழந்ததுதான் மிச்சம். மிஞ்சி மிஞ்சி போனா என்ன சொல்லுவீங்க, எனக்கு தனியா இருக்க போர் அடிக்குது. அதனாலதான் பார்க்கிறேன்னு சொல்லுவீங்க. உங்க கூடவே உங்களால இருக்க முடியலன்னா, உங்க கூட யாருங்க இருக்கமுடியும். நல்லா சிந்திச்சி பாருங்க.

மேலும் உங்க எல்லார்கிட்டயும் ஒரு சின்ன வேண்டுகோள்.

நம்ம வீடு கட்டும்போது அஸ்திவாரம் இல்லாமல் வீடு கட்டுனா அந்த வீடு நிலைத்து நிற்குமா? நிற்காது இல்லையா?அது மாதிரி தான் நம்ம குருஜி சொன்ன மூச்சு பயிற்சி.

தியானத்துக்கு முன்னாடியே மூச்சுப் பயிற்சிக்குன்னு சில நிமிடங்களை ஒதுக்குங்க. அதுக்கப்புறம் பாருங்க தியானம் எவ்வளவு அற்புதமாக இருக்கும். நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். மேலும் ஒரு விஷயம் நம்ம உள்ளுணர்வு அருமையாக வேலை செய்யும். **P.T.O**

ஒரு இடத்துக்கு போனா கூட இது நடக்கும் நடக்காது இவர் வருவார் வர மாட்டாருன்னு நம்ம உள்ளுணர்வு கரக்டா சொல்லும். கிட்டத்தட்ட 99சதவீதத்துக்கு மேல் சரியாக நடக்கிறது. இது அன்றாட வாழ்க்கைக்கு ரொம்ப உதவியா இருக்கு.அதிலேயும் காலை நேரத்துல உங்க வீட்ல வேப்பமரம் இருந்தா அந்த மரத்துகிட்ட நின்னு ஆல்பா முத்திரையைப் பயன்படுத்தி ஒரு நிமிடம் கண்களைமூடி கட்டளைகள் கொடுத்து பாருங்க. அதோட சக்தி அவ்வளவு அருமையா வேலை செய்யும். இது ஒரு நாள் தற்செயலாக நடந்தது. அப்புறம் ரெகுலரா சோதித்துப் பார்த்தேன். சின்ன விஷயங்கள் சீக்கிரம் நடக்குது. பெரிய விஷயங்கள் கொஞ்சம் டைம்ஆகுது. அதோட சக்தியும் ரொம்ப அருமையான விஷயம். நீங்களும் முயற்சி பண்ணி பாருங்க. சும்மா கடமைக்கு ஏனோதானோன்னு பண்ணாதீங்க. எந்தஒரு செயலும் தொடர்ச்சியா செய்யனும். முழு மனசோட பண்ணுங்க வெற்றி நிச்சயம். இந்த வெற்றியை தொடர்ந்து நானும் எனது நண்பர் நல்லுசாமியும் இணைந்து (இவரும் ஆல்பா சித்தர்) குருஜீயின் ஆசீர்வாதத்தில் ஏற்றுமதி தொழில் அதாவது எக்ஸ்போர்ட் பிசினஸ் செய்யலாம் என்ற முயற்ச்சியில் இருக்கிறோம். நாங்கள் இணைந்து செய்யும் இந்தத் தொழில் மேலும் மேலும் வளர்ந்து பொருளாதாரத்தில் நன்றாக முன்னேற தயவு செய்து நமது சொந்தங்கள் அனைவரும் எங்களை ஆசீர்வதிக்குமாறும் தங்க நிறம் கொடுக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். என்றும் ஜாலியாக கார்த்திக்

## குருஜியின் பதில்

கார்த்திக்.... தற்செயலாக உங்கள் பதிவை இப்பொழுது காண நேர்ந்தது. உண்மையாகவே என் கண்கள் கலங்கி விட்டன. இலட்சம் பேருக்கு ஆல்ஃபா தியானம் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். பலரது அனுபவங்கள் என்னையுமே வியப்பில் ஆழ்த்தி மகிழ செய்திருக்கின்றன. ஆனால் நான் இப்படி கண் கலங்கியது இதுவே முதல் முறை. உங்கள் பதிவை ஒவ்வொரு ஆல்ஃபா சித்தரும் படித்து பயன் பெற வேண்டும். அத்தனை குழுவிலும் இதை பதிவேற்றுவோம். அனைவருக்கும் ஒரு எடுத்துக் காட்டாக நீங்கள் இருக்கிறீர்கள்.

இதே உறுதியுடன் தியானம் செய்யுங்கள். தியானம் செய்ய முடியவில்லை என்று பல காரணம் சொல்பவர்களுக்கு உங்கள் பதிவு ஒரு சிறந்த மருந்து. இன்னும் சிறப்பான வாழ்க்கை உங்களுக்கு நிச்சயம் அமையும்.

உங்களை சந்திக்க விரும்புகிறேன். இந்த மாதம் 20, 21 தேதிகளில் கோவையில் வகுப்புகள் இருக்கின்றன. அவசியம் வரவும். ஏதேனும் ஒரு வகுப்பில் கட்டணமின்றி கலந்து கொள்ளவும்.

புதிய தொழிலும் உங்கள் வாழ்க்கையும் சிறக்க எனது மனப்பூர்வமான ஆசீர்வாதங்கள்!

கார்த்திக்... உங்கள் புகைப்படம் ஒன்றை இங்கு அனுப்புங்கள். உங்கள் பதிவை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து படத்துடன் பதிவு செய்ய விரும்புகிறேன்.

## ஸ்ரீமாதா

*AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us a whatsapp message on* ***+919884555173*** *to get connected*

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குழுவில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து **+919884555173** என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குழுவில் இணைக்கப்படுவீர்கள்.

**ANNOUNCEMENT**

பொதிகை POTHIGAI

**'KELAI MANAME'**

GURUJI'S PROGRAM ON POTHIGAI TV !

7.15 am Monday to Friday

You can also watch from mobile app **'DD POTHIGAI LIVE'**

**அறிவிப்பு**

'கேளாய் மனமே'

பொதிகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 7.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை

மொபைல் ஆப் **'DD POTHIGAI LIVE'** மூலமும் காணலாம்.

**ALPHA MIND POWER - MOBILE APP**

Download the app and register. You can make advance payment for class through mobile app **ALPHA MIND POWER**

**ஆல்ஃபா மைண்ட் பவர் - மொபைல் ஆப்**

**ALPHA MIND POWER** மொபைல் ஆப் மூலமாக வகுப்பிற்கு முன் பணம் செலுத்தலாம்.

## WORKSHOP SHEDULE

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Chennai (Tamil) | **CHAKRA MEDITATION PSYCHIC ENERGY** | 03/08/2019<br>04/08/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T Nagar, Chennai |
| Trichy (Tamil) | **SRIVIDYA AMRUT SIDDHI** | 10/08/2019<br>11/08/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency, McDonalds Road, Trichy |
| Rishikesh Yatra | **BADRINATH SHANTAGNI WORKSHOP** | 15/08/2019 to 17/08/2019<br>19/08/2019 to 23/08/2019 | | | Swami Dayananda Saraswathy Ashram, Rishikesh |
| Dubai (English) | **ANUBANDHAM** | 06/09/2019 | Fri | 10am to 3pm | Namaste Yoga Centre, 54 Amman Street, Al Nahda 2, Dubai UAE Contact No.: +97152 138 6030 |
| Chennai (Tamil) | **KUNDALINI MAHASHAKTHI ALPHA LEVEL-1** | 28/09/2019<br>29/09/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T Nagar, Chennai |

*Printed & Published for*

ALPHA MIND POWER™ AMP "Power of the Subconscious Mind"

***Dr. Vijayalakshmi Panthaiyan***
***ALPHA MIND POWER***
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai - 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841272146*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

***PRINTED MATERIAL***